Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 4 ஏப்ரல் - 2007




## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. கிறிஸ்தவம் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 16
5. சிறுவர் பகுதி ........ 19
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 21
7. அந்நிய பாஷைகளைக் கற்றுக்கொள்வோம் ........ 25
8. இரத்தசாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 APRIL - 2007 Issue - 4


ஆசிரியர் உரை

## "இரண்டுக்கும் போதும்"

இரண்டுக்கும் போதும் என்பதைப் படிக்கும்போதே நமக்குள் எந்த இரண்டுக்கும்போதும் - எது போதும் என்ற கேள்வி தானாக எழும். நன்மைக்கும், தீமைக்குமா அல்லது வாழ்வுக்கும், தாழ்வுக்குமா? அல்லது சுகத்திற்கும், சுகவீனத்திற்குமா அல்லது மகிழ்ச்சிக்கும், துக்கத்திற்குமா அல்லது பிழைப்பதற்கும், மரிப்பதற்குமா அல்லது வேறு எந்த இரண்டுக்கும் தான் என்று இயல்பாகவே நினைக்கத்தோன்றும். நான் பட்டியலிட்டிருக்கும் இந்தக் காரியங்களெல்லாம் இப்பூமியோடு சம்பந்தப்பட்ட காரியங்களாக இருப்பதால், நான் சொல்ல வரும் **இரண்டும்** இவைகளோடு சம்பந்தப் பட்டவையல்ல. ஏனெனில், இப்பூமியோடு முடிந்துபோகும் காரியங்களைக் குறித்துப் பேசுவதற்காக நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு (எபே. 1:4) சுவிசேஷத்தினாலே அழைக்கப்படவில்லை (2தெச 2:14) அப்படியானால் **அந்த இரண்டும்** எது என்றும், அவ்விரண்டுக்கும் போதுமானது எது தான் என்றும் நீங்கள் கேட்கக் கூடும். அதைத் தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

கை இரண்டும் போதும் என்ற எனது ஆசிரியர் உரையில், இப்பூமியில் ஒருவன் பெலத்தோடு வாழ்வதற்கு எது போதும் என்று எழுதியிருந்தேன். **அமரிக்கையும், தேவன்மீது வைக்கும் நம்பிக்கையும்** ஆகிய இரண்டு "கை" களும் போதும் என்று வேத வசனங்களின் ஆதாரங்களோடு சொன்னேன். அது உங்களுடைய வாழ்வுக்கு "கை" கொடுத்ததென்றும் தெரிந்து கொண்டேன். ஆனால், தேவன் மீது நம்பிக்கை வைக்கும் ஒருவன்,

இப்பூவுலகில் சுகமாக வாழ்வது எப்படி என்பதில் மாத்திரம் நாட்டம் உள்ளவனாக இருந்தால், தேவன் அதில் பிரியப்படு வாரா? நிச்சயமாக மாட்டார். ஏனெனில், இது குறித்து தனது தாசனாகிய அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு மிகத்திட்டமான தனது விருப்பத்தை வெளிப்படுத்தி யுள்ளார். கவனியுங்கள்: "**இம்மைக்காக மாத்திரம், நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனு ஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்**" (1கொரி. 15:19).

இப்பூமியின் வாழ்வுக்கு அவர் மீது நம்பிக்கை வைக்கும் நாம், அந்த நம்பிக்கையே நம்மை பரிதபிக்கவும் செய்துவிடும் என்பதை அறியும்போது நமக்கு பயமாகத்தானே இருக்கிறது. இது குறித்து நாம் கொஞ்சமாகிலும் யோசிக்க வேண்டியது அவசியம் தானே. மேலே உள்ள வசனம், நம்முடைய நம்பிக்கை இம்மைக்காக மாத்திரம் இருக்கக்கூடாது என்று வலியுறுத்திச் சொல்கிறது. அப்படியானால், நம்முடைய நம்பிக்கை எதற்கும் சேர்த்து இருக்க வேண்டும்? சொல்லுங்கள். ஆம், இம்மைக்கும், மறுமைக்கும், சேர்த்தே இருக்கவேண்டும். இக்கருத்தை நாம் மேலும் விளங்கிக் கொள்வதற்காக, இதே பவுலைக் கொண்டு, தேவன் தந்திருக்கும் இன்னுமொரு வசனத்தையும் கவனியுங்கள். "**சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுளளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது**" (2 தீமோ. 4:8) என்று. தேவன் மீது நாம் வைக்கும் நம்பிக்கை இந்த ஜீவனுக்கும் பயன்படுகிறதென்று சொல்லும் அதே தேவனுடைய வார்த்தை தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறதென்று கூறுகிறபடியால், இரண்டுக்கும் போதுமானதாக இருப்பது தேவபக்திதானென்று நாம் தைரியமாகச் சொல்ல முடியும். இப்பொழுது, "**தேவ பக்தி**" **இரண்டுக்கும் போதும்** என்று சொல்லப்பட்டிருக்கும் வசனத்தின் பின்னணி பற்றி சிறிது தெரிந்துகொள்வோம்.

இந்த ஜீவனுக்கும், இனிவரும் ஜீவனுக்கும் "**தேவ பக்தி**" போதும் என்ற கருத்து இடம் பெற்றிருக்கும் நூல், அப்போஸ்தலனாகிய பவுலாலே. தனது அந்திய காலத்தில், விசுவாசத்தால் தான் பெற்றெடுத்த உத்தம குமாரனும், லீஸ்திரா பட்டணத்தைச் சேர்ந்தவனுமான தீமோத்தேயவுக்கு எழுதப்பட்டுள்ள முதலாவது நிருபமாகும். அப்போஸ்தலனாலே எழுதப் பட்ட கடைசி மூன்று நூல்களுள் இதுவும் ஒன்று.

அப்போஸ்தலன் பவுல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகெங்கும் எடுத்துச் சென்றபோது, எதிர்வந்த எல்லாவற்றையும் துச்சமென மதித்து மிகுந்த வைராக்கியத்தோடு ஊழியம் செய்தார் என்பது நாமறிந்ததே. சிறையில் தள்ளப்படும் அளவுக்கு அவருக்கு எதிர்ப்பு இருந்ததென்பதும் நமக்குத் தெரியாததல்ல.

அப்படி அவர், முதல்முறையாக சிறையிலடைக்கப்பட்டு, விடுதலை யாக்கப்பட்டவுடன் தனது சீடப்பிள்ளையாகிய தீமோத்தேயுவைக் கூட அழைத்துக் கொண்டு எபேசு பட்டணத்துக்குச் சென்றார். அங்கிருந்த சபையில், தான் கண்ட காரியங்கள் தனக்கு கடுமையான கவலையை ஏற்படுத்தினபடியால், தீமோத்தேயுவிடம் சில பொறுப்புகளை ஒப்படைத்து அவனை எபேசுவிலேயே விட்டுவிட்டு தான் மட்டும் மக்கெதோனியாவிற்கு புறப்பட்டு விடுகிறார். (1தீமோ 1:4). பவுலடியாரின் கவலைக்கான காரணங்கள் குறைந்தது இரண்டு. 1) சபையில் எழும்பியிருந்த கள்ளப் போதகங்கள். 2) சபையின் பிற நடைமுறை ஒழுங்கு சம்பந்தப்பட்ட காரியங்கள். இங்கே தீமோத்தேயுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு மிகப் பெரியதும், அதிக நுட்பமானதாகவும் இருந்துள்ளது. ஆகவே அப்பொறுப்பு களை தீமோத்தேயு சரியாக நிறைவேற்ற வேண்டுமானால், அவனுடைய செயல்பாடுகள் அப்போஸ்தலனின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறதென்பது அந்த சபைக்கும் தெரிந்திருக்க வேண்டிய அவசியமிருந்தது.

இந்தப் பின்னணியில்தான், அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெ தோனியா போய்ச் சேர்ந்தவுடன், இந்த நிருபத்தை எழுதி அனுப்பியுள்ளார். ஒருவேளை, இதிலுள்ள காரியங்கள் அப்போதைய சூழ்நிலைக்கு மிகப் பொருத்தமானதாக இருந்திருந்தாலும் கூட, இன்றளவும் சபையின் செயல் பாடுகளுக்கு ஏற்றதாகவும், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பிரயோஜனமுள்ள தாகவும் இருக்கிறது.

அடுத்து, நமது ஆராய்ச்சிக்கான வசனம் இடம் பெற்றிருக்கும் பகுதியை கவனித்தால் (2 தீமோ 4:6-16). ஒரு முக்கிய முயற்சியில் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் ஒரு இளைஞனின் நடத்தை எப்படியிருக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார். இங்கே தான், இம்மாதம் நமக்குப் பயன்படும் வசனமும் இடம் பெற்றுள்ளது. "சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப்பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளது" என்று, இப்பொழுது, இங்கே சொல்லப்பட்டிருக்கும் இரண்டு காரியங்கள் குறித்துப் பார்ப்போம்.

**1 சரீர முயற்சி - அற்ப பிரயோஜனமுள்ளது**

முதலாவது, இந்த சரீரம் பற்றி பார்ப்போம். சங்கீதக்காரன் சொல்வது போல், சரீரமானது பிரமிக்கத்தக்க அதிசயமாய் தேவனால் உருவாக்கப் பட்டிருந்தாலும் (சங். 139:14). உருக்குலைந்து ஒருநாளிலே அழிந்துபோகும் படியாகவே அது வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தான், ஞானி சாலமோன் மண்ணான இந்த சரீரம் மீண்டும் மண்ணுக்கே போகும் என்று கூறுகிறார் (பிரசங்கி 12:7). அதுமாத்திரமல்ல தேவ மனிதனாகிய மோசே சொல்வது போல, பூமியில் பிறக்கும் எல்லோரும் எழுபது வருஷமோ அல்லது பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமோ (சங். 90:10) முழுமையாக வாழ்வோம் என்பதற்கும் எந்த உத்திரவாதமுமில்லை.

மனிதனின் சரீர வாழ்வு குறித்து வேதாகமத்தின் பிற வசனங்களை நாம் கவனித்தால் அது எவ்வளவு நிலையற்றது என்பது நன்றாக விளங்கும் யோபுவில் பார்க்கும் போது மனிதனின் சரீர வாழ்க்கை ஒரு கனவுக்கும் மேகத்திற்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது (யோபு 20:8;7:9) புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியர் அதை புகைக்கும் (யாக்4:14) பேதுரு ஆசிரியர் புல்லுக்கும் ஒப்பிடுகிறார் (1பேதுரு 1:24) மனிதனுக்கு கொடுக்கப் பட்டிருக்கும் ஆயசு நாட்கள் குறுகினதாகமாத்திரமல்லாமல் அது சஞ்சலம் நிறைந்ததாகவும் உள்ளதென்று வசனம் சொல்கிறது (ஆதி. 47:9 யோபு 14:1).

குறுகின ஆயுளும், நிறைந்த சஞ்சலமும் கொண்ட இந்த சரீரத்தைக் கொண்டு, இந்த சரீர வாழ்வுக்காக எடுக்கப்படும் முயற்சிகள் கண்டிப்பாக அற்ப பிரயோஜனமுள்ளவைகளாகவே இருக்கமுடியும்.

இந்நூல் எழுதப்பட்டுள்ள மூல மொழியான கிரேக்கத்தில் "முயற்சி" என்ற வார்த்தைக்கு, ஒரு சிறப்பான பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஆம், அது ஒரு தேகப் பயிற்சி காலையில் விடாமல் செய்யப்படும் ஒரு பயிற்சிக்குப் பயன்படும் வார்த்தை. அதாவது, ஒரு மனிதன், தன் சரீர வாழ்வுக்காக எப்படித் தான் முயற்சித்தாலும், எவ்வளவுதான் முயற்சித்தாலும், ஒரு வேளை இடைவிடாமல் முயற்சித்தாலும் அதன் பலன் அற்பமானதுதான் என்பது தான் இதன் பொருள். ஏனெனில், அவன் ஆயுள் அற்பமாக இருப்பதாலும் அவன் சரீரத்தால் எடுக்கும் முயற்சியின் பலன் இந்த அற்ப ஆயுளுக்கு மாத்திரம் பயன்படுவதாலும் அப்பலன் அற்ப பிரயோஜனமுள்ளதென்ற அந்தஸ்தைத் தான் பெறமுடியும்.

ஆம், நன்றாக சிந்தித்துப் பாருங்கள், விடா முயற்சியின் பலனாக பெறப்படும் பட்டங்களோ அதனால் அடையும் மரியாதையோ அல்லது கடுமையான உழைப்பின் மூலம் சேர்க்கப்படும் சொத்துக்களோ சொத்துக்கள் தரும் செல்வாக்கோ, செல்வாக்கு தரும் புகழோ, புகழ் தரும் சுகமோ அல்லது ஒருவனின் சரீர முயற்சியால் பெறப்படும் எதுவோ நமது மரணத்திற்குப்பின் நம்மோடு வருவதில்லை அவ்வளவு ஏன், ஒருவனின் சரீர முயற்சியால் சேர்ப்பவைகள் அவன் சரீர வாழ்க்கை முழுவதும் அவனோடிருக்கும் என்பதற்கும் எந்த உத்திரவாதமுமில்லை. ஆம், வாழ்ந்து கெட்டவர்களையும், இருந்து இழந்தவர்களையும் உயர்ந்து தாழ்ந்தவர்களையும் எழுந்து விழுந்தவர்களையும் நம்முடைய கண்களுக்கு முன்பாக நாம் பார்த்துக் கொண்டுதான் உள்ளோம்

ஆகவேதான், அப்போஸ்தலன் பவுல் தான் நேசித்த தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது என்று எழுதியிருக் கிறார்.

இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும், இந்த மாமனிதனின் வார்த்தைகளில் அடங்கியிருக்கும் பேருண்மையை உணர்ந்து, சரீர

முயற்சிக்கு முக்கியத்துவம் தந்து நமது வாழ்க்கையை வீணாக்கி விடாமல் தேவனுக்கு பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போமாக!

**II தேவபக்தி - எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளது:**

இப்பொழுது நாம் தேவபக்தி பற்றி கவனிப்போம். நாம் பார்த்த வசனத்தில் தேவ பக்தி எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்றுதான் உள்ளது. ஆனால், எல்லாவற்றுக்கும் என்பது பொருள் மாறாத மாற்று வார்த்தையாக இருப்பதால் நான் இவ்வார்த்தையை இங்கே பயன்படுத்தி யுள்ளேன்.

சரி, முதலாவது, "தேவபக்தி" என்றால் என்னவென்று பார்த்து விடுவோம். தேவன் மீது நாம் வைத்திருக்கிற பக்தியென்று நாம் பொதுவாக தெரிந்து வைத்திருந்தாலும், இதற்கு இன்னும் ஆழமான பொருள் உண்டு. ஒரு வேத அறிஞன் இதற்கு இவ்விதம் விளக்கம் கொடுக்கிறார். "ஒன்றான மெய்த் தேவனை நோக்கிப் பார்ப்பதும், அவருக்கு ஏற்ற வகையில் வாழ்வதும் தான்" தேவபக்தி என்று. வேறொரு அறிஞன், "சரியான நம்பிக்கை யினடிப்படையில் மேற்கொள்ளப்படும், மிகச் சரியான செயல்பாடு களுடனான வாழ்க்கை" என்று கூறுகிறார். "தேவபக்தி" என்ற இந்த வார்த்தையை மற்ற எல்லா வேத ஆசிரியர்களைக் காட்டிலும் பவுலடியார் அதிகமாக உபயோகப்படுத்தியுள்ளார். (1தீமோ 2:2, 3:16, 4:7-9, 6:3, 5-6,11. 2தீமோ 3:5, தீத்து 1:3,2:12). ஒரு வேளை தனிப்பட்ட ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் தேவபக்தி மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துவது இதன் நோக்கமாக இருக்குமோ?.

இப்படி மிகுந்த முக்கியமான அதிக ஆழமுள்ள பொருளைத் தரக்கூடிய தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிக அவசியமான "தேவ பக்தி" இரண்டுக்கும் - அதாவது இந்த ஜீவனுக்கும், இனிவரும் ஜீவனுக்கும் போதுமென்று பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு சொல்லுகிற படியால், அது எப்படிப் போதுமானதென்று இப்பொழுது பார்ப்போம்.

## A. இந்த ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது

அநேகருடைய பொதுவான அபிப்ராயம், தேவ பக்தி இந்த ஜீவனுக்கு லாயக்கற்றது என்பதுதான். ஒருவேளை இக்கருத்தை பெரும்பாலானவர்கள் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் தங்கள் நடவடிக்கைகளால் நாளும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர். அநேகர், தேவ காரியங்களில் நாட்டம் அற்றவர்களாக இருப்பதற்குக் காரணம் இப்படிப்பட்ட மனோபாவமே, ஒருவேளை, நாட்டம் கொண்டவர்களும் நாளும் கழிந்து கொண்டே போவதற்கும் இப்படிப்பட்ட மனநிலைதான் காரணம்.

ஆனால், நாம் இப்பொழுது பார்த்த விளக்கத்தின்படியும், வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அர்த்தத்தின்படியும் ஒருவன் தேவ

பக்தியாய் நடந்தால் அவன் வாழ்க்கை, இப்பூமியில் நிச்சயமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். யாருக்கும் சந்தேகம் தேவையில்லை. தயவு செய்து, வாக்கு மாறாத தேவனால் கொடுக்கப்பட்டுள்ள, கீழ்க்கண்ட வசனங்களை யெல்லாம் கவனியுங்கள். "உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்" (ஏசா. 26:3). "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" (நாகூம் 1:7). ".....நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 39:18).

இன்னும், இந்தப் பூமியில் ஒரு மனிதன் வாழ்வதற்கு தேவையான உணவும், உடையும் அவனுக்கு தேவபக்தியின் மூலம் கிடைக்குமென்று இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். "முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்" (மத். 6:33) என்று இயேசுவின் இக்கருத்துக்கு தாவீதும் பக்கபலம் சேர்க்கிறார். "சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" (சங். 34:10) என்று.

அதுமாத்திரமல்ல ஏராளமான கவலைகள் பெருக்கெடுத்து ஓடுகின்ற இந்த உலகத்தில் தேவபக்தியாய் நடக்கிற ஒரு மனுஷன் எதிர் நீச்சல் போட முடியும் என வசனம் கூறுகிறது. ஆம், அந்தக் கவலைகளினால் தேவ பக்தியுள்ளவனும் அடித்துச் சென்று விடாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழியுண்டென்று அப்போஸ்தலர்களாகிய பவுலும், பேதுருவும் நமக்கு கூறியுள்ளனர். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும் (பிலி. 4:6,7). "அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1பேதுரு 5:7) என்று.

தேவ பக்தி, இந்த ஜீவனுக்குப் போதுமானதென்பதற்கு ஆதாரமாக ஒரு சம்பவத்தை சொல்கிறேன். ராஜாக்களின் நாட்களில் வாழ்ந்த ஒரு பெயர் சொல்லப்படாத விதவை, தனது பூமிக்குண்டான வாழ்க்கைக்கான கடைசி ஆதாரமாக, பானையிலே ஒரு பிடி மாவும், கலசத்திலே கொஞ்சம் எண்ணெயும் வைத்துக்கொண்டு, அதைச் சமைத்துச் சாப்பிட்டுச் செத்துப் போகும்படியாக இரண்டு விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள், அப்போது, கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியா, அவளைக் கூப்பிட்டு கொஞ்சம் தண்ணீரும், கொஞ்சம் அப்பமும் கேட்கிறான். அவள் பயந்து, யோசித்த பொழுது அவன் "இஸ்ரவேலின் தேவன் உன்னைக் காப்பாற்றுவார்" நீ போய் நான் சொல்கிறபடி செய்" என்றான் "அவள் போய் எலியாவின் சொற்படி

செய்தாள்... கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே மாசெலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை" என்று வேதம் கூறுகிறது (1இராஜாக்கள் 17:9-16).

இஸ்ரவேலின் தேவன் மீது பக்திகாட்டின அந்த விதவைக்கு, தேவன் செய்த நன்மையைப் பாருங்கள். அவரை நம்புகிறவர்களுக்கு இந்த ஜீவனுக்குண்டான ஆசீர்வாதங்களை அவர் கண்டிப்பாகக் கூட்டித் தருகிறார்.

**B. இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது**

தேவபக்தி இரண்டுக்கும் போதுமென்று சொல்வதின் பொருளே. அது இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறதென்பதால் தான். ஆனால், "இனிவரும் ஜீவனைக் குறித்து" மனித சமுதாயம் பெரிதாகக் கவலைப் படுவதுபோல் தெரியவில்லை. இம்மைக்கே நேரம் போதாமலிருக்கும் போது, மறுமையைக் குறித்து சிந்திப்பதற்கும், அதற்கான செயல்களில் ஈடுபடுவதற்கும் அவனுக்கு நேரம் எங்கே?

ஆயினும், தேவனுக்குப் பயந்து, பக்தியாய் நடக்கிற பிள்ளைகளுக்கு தேவன், இம்மைக்கானவைகளோடு மறுமைக்கானவைகளையும் வாக்குத்தத்தம் செய்துள்ளார் என்பதை நாம் தெரிந்து கொள்ளாமலிருக்கக்கூடாது.

ஒரு சமயம் அப்போஸ்தலன் பேதுரு, நாங்கள் உம்மைப் பின்பற்றினதற்குக் கூலியாக எங்களுக்கு என்ன கிடைக்குமென்று கேட்டான். "அதற்கு இயேசு பிரதியுத்தமாக; .... இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக வீடுகளையும்,சகோதரரையும், சகோதரிகளையும் தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும்". "மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான்என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற்கு 10:28-30) என்றார். ஆம் ஒருவனுடைய தேவக்தியினாலே கிடைக்கிற மிகப் பெரிய ஆசீர்வாதம் "நித்தியஜீவன்".

அதுமாத்திரமல்ல, தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவருக்கும் "வாடாத ஜீவ கீரிடம்" வைக்கப்பட்டிருக்கிறதென்று வாக்கு கொடுக்கப்பட்டுள்ளது (2தீமோ. 4:8) இந்த ஜீவகிரீடம் பற்றி யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்திலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. (வெளி. 2:10).

இந்தப் பூமியின் வாழ்க்கையில் ஒருவனுடைய ஜீவன் ஒரு நாளில் போகக் கூடியதாகவும், இந்தப் பூமியின் வாழ்க்கையில் புகழுக்குள் சென்றவர்களுக்கு சூட்டப்படும் கிரீடம் வாடிப்போகிற தன்மையுடையதாகவும் இருக்கிறது. ஆனால், தேவ பக்தியில் தொடர்ந்து வாழ்பவர்களுக்கோ நித்திய ஜீவனும், வாடாத ஜீவகிரீடமும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது இது என்ன லேசான காரியமா? இந்த இரண்டினுடைய மேன்மை உங்களுக்குப் புரிகிறதா? இப்பொழுதாவது தேவபக்தி எல்லாவற்றுக்கும், அதாவது, இந்த ஜீவனுக்கும் இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதென்று விளங்குகிறதா? சொல்லுங்கள். தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரன் இவ்வளவு நன்மைகளை, இழந்து விடக்கூடாதென்பதற்காகத்தான் என் மகனே, நீ தேவபக்திக்காக முயற்சி பண்ணு, தேவ பக்தியில் நட, தேவ

பக்தியில் தேறினவாயிரு என்று அடிக்கடி கூறுகிறார். ஆகையால், அருமையானவர்களே, நம் ஒவ்வொருவருடைய இரண்டு வாழ்க்கையும் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் நாம் "தேவ பக்தியாய்" நடப்பது மிகவும் அவசியம்.

இந்தக் கட்டுரையை முடிக்கும் முன்பாக, இது சம்பந்தப்பட்ட இன்னொரு காரியத்தையும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நாம் இப்பொழுது தியானித்த வேத வசனத்திற்கு (1தீமோத். 4:8) அடுத்த வசனத்தையும் தயவு கூர்ந்து கவனியுங்கள் "இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமாயிருக்கிறது (4:9) என்றுள்ளது. அதாவது, தேவபக்தி இம்மைக்கும், மறுமைக்கும் போதுமானதாக இருக்கிறதென்று பவுல் சொல்வது உண்மை என்று அங்கே மீண்டும் சொல்கிறார் அல்லது பரிசுத்த ஆவியானவர், அது உண்மைதானென்று எழுதும்படி தூண்டுகிறார். ஏன்?

"இந்த வார்த்தை உண்மை" என்று பவுல் இங்கே மாத்திரம் எழுதாமல் வேறு சில இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது..." (1தீமோ 1:15). இன்னும் "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை" (1தீமோ 3:1) இந்த வசனங்களையெல்லாம் கவனிக்கும் போது நமக்கொரு உண்மை புலனாகிறது. அதாவது, மனிதர்கள் சொல்லப்படுகின்ற தேவ காரியத்தின் மேன்மையை உணரமுடியாமல் தடுமாறி, தனக்கிருக்கிற சிற்றறிவினடிப்படையில் அதை அணுகி, முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல், அவைகளை ஒதுக்கி விடுவதற்கு வாய்ப்பிருக்கிறதென்று பவுலடியார் எபபொழுதெல்லாம் கருதினாரோ அல்லது பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதெல்லாம் எண்ணினாரோ, அப்பொழுதெல்லாம், "இந்த வார்த்தை உண்மையானது" என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் பொருள் இது சத்தியமான வார்த்தை. உனக்கு விளங்கவில்லையென்பதற்காக ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிடாதே, எப்படியாவது ஏற்று இதன்படி செய் என்பதுதான்.

அப்படியானால், அருமையானவர்களே, "தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதென்றும் எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளதென்றும்" பவுல் சொல்லிவிட்டு இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுள்ளதென்று சொல்லியிருக்கிறபடியால், நாம் நம்முடைய வாழ்க்கையில் இவ்வார்த்தைகளை அட்சரம் பிசகாமல் அப்படியே ஏற்றுக் கொண்டு தேவ பக்தியாய் முழுமையாக நடந்து, இரண்டு ஜீவன்களுக்குமான ஆசீர்வாதங்களைப் பெற்று, இம்மையில் சுக ஜீவிகளாகவும், மறுமையில் நித்திய ஜீவிகளாகவும் ஜீவிப்பதற்கு பரலோகத்தின் தேவன் உங்களுக்குத் துணை புரிவாராக. ஆமென்.

**E.Z.S. இராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பத்தாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## *திருமறை தியானம் நேயர்கள் &*
## *திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்*

இடம் : **YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**
**(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.**
**ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)**
**(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)**

நாள் : **மே மாதம் 7,8,9 - 2007 (திங், செவ், புதன்)**

### *சிறப்பம்சங்கள்*

* கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
* தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
* ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
* பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
* கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
* வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
* குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
* பெண்களுக்கு தனி இடவசதி.
* சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **75 /-** சிறியவர்கள் ரூ. **50 /-**

## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு.**
**ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# கிறிஸ்தவம் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?

மற்ற எல்லாவற்றை காட்டிலும், கிறிஸ்தவம் உலகத்திற்கென ஒரு காரியத்தில் மிக அதிகமாக செய்துள்ளது. அதை ஏற்றுக்கொள்ளாதவர்களும் கூட இதினால் கவரப்பட்டுள்ளனர். ஒரு மனிதன் மீது கிறிஸ்தவம் கொண்டுள்ள செல்வாக்கு, அவன் எந்த அளவுக்கு கெட்டவனாக இருந்தானோ, அந்த அளவுக்கு அவன் நல்லவனாக மாற ஏதுவாக்குகிறது. கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்படாதிருந்திருந்தால், உலகம் எந்நிலையில் இருந்திருக்கக்கூடும் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். நாம் வாழவே தகுதியற்ற, மிக பயங்கரமான இடமாகத்தான் இவ்வுலகம் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மனித வர்க்கத்திற்கு பொதுவாக கிறிஸ்தவம் ஆற்றிய பணி, இயல்பில் தனித்துவம் வாய்ந்துள்ளது. எனவே அதில் மிகப்பெரிய ஆதாயத்தை நாம் அடையவேண்டுமாயின், அதை ஏற்றுக்கொள்வதற்கு நாம் முற்பட வேண்டும். கிறிஸ்தவத்தின் காரணரான இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களை பின்பற்றுவதின் மூலம், அதின் அடிப்படைக் கோட்பாடுகள் நமது வாழ்வில் நுழைந்து, ஆசீர்வாதமாகி, நம்மை கனி கொடுக்கச் செய்யும்.

ஏதோ ஒரு மார்க்க அமைப்பைப் பின்பற்றுவதன் மூலமோ, மனதளவில் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமோ, சொல்லி முடியாத ஆசீர்வாதங்களையும், பரதிபலன்களையும் பெற இயலும் என்ற ரீதியில், சிலர் நம்பும்படி வழிநடத்தப்படுகின்றனர். தாங்கள் எதையுமே செய்யாமல், தங்களின் அனைத்து பிரச்சினைகளும் உடனடியாக தீர்க்கப்பட்டு, தாங்கள் ஐசுவரியவான்களாக மாறுகின்ற (கற்பனை) காட்சியைப் பெற்றுக் கொள்கின்றனர். இவைகளனைத்தும், மாம்சக் கண்ணோட்டத்தில், மாம்சப் பிரகாரமான ஆதாயத்திற்கென செய்யப்படுகிறதேயன்றி, ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் வருவதில்லை. இப்படிப்பட்டவர்கள்தான், தங்களின் கற்பனைக் கனவுகள் நனவாகாதபடியால், வெகு சுலபத்தில் வேறு ஒன்றை நாடிப்போக ஆரம்பித்து விடுகின்றனர்.

உரிய கிரயத்தை செலுத்துவோருக்கு எளிமையான கிறிஸ்தவத்தில் அநேக பிரதிபலன்கள் காணக்கிடக்கின்றன. அந்த கிரயம், விசுவாசம், கீழ்ப்படிதல், ஊழியம், அவற்றைச் சார்ந்திருத்தல், மற்றும் உண்மை யாயிருத்தால் ஆகியவற்றில் இருந்து தான் வருகிறது. இருதய பூர்வமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டோருக்கு, மேலும், மேலுமாக மாம்ச மற்றும் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்கள் வந்துகொண்டே இருக்கிறது.

1. கிறிஸ்தவம் உங்களுடைய கடந்த காலப் பாவத்திலிருந்து உங்களுக்கு இரட்சிப்பை கொண்டு வருகிறது. அவருக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும்

நித்திய இரட்சிப்பை கொடுக்கத்தக்க காரணராக கிறிஸ்து அவர்களின் வாழ்க்கையில் மாறுகிறார். (எபி. 5:9). அவர் சொன்னார், "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்" (மாற்கு 16:16). மனிதன் பாவியாயிருக்கிறான் அவனுக்கு பாவ மன்னிப்பு தேவை. இப்படியாக மனிதனின் மிகப்பெரிய பொக்கிஷமான ஆத்துமாவை சுத்திகரித்து, பரிசுத்தமாக்குவதற்கு கிறிஸ்துவால் மட்டும் சாத்தியமாகும். (லூக்கா 19:10; மாத். 16:26).

2. கிறிஸ்தவம் தேவனின் அநேக வாக்குத்தத்தங்களுடன் நம்மை தொடர்பு படுத்துகிறது. அங்கே தான் நமக்கு ஆவியின் வரம் கிடைக்கிறது. (அப். 2:38) சபையில் சேர்க்கப்படுகிறோம். (அப். 2:47), கர்த்தரின் பிரசன்னத்தை உணருகிறோம் (மத். 28:29). ஜெபிக்கும் சிலாக்கியம் கிடைக்கிறது. (யோவா. 9:31), மற்றும் நித்திய ஜீவனுக்குரிய வாக்குத்தத்தம் நமக்குக் கிடைக்கிறது (யோவா. 14:1-3)

3. கிறிஸ்தவம் ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களைத் தருகிறது. ஆகையால், முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத். 6:33) தேவனுடைய இராஜ்யமாகிய சபையை, முதலாவதாகத் தேடும் போதுதான் இவைகள் கூடக் கொடுக்கப்படும் என்பதைக் கவனிக்க வேண்டும். அடிக்கடி கிறிஸ்தவர்கள் தாங்கள் மிகச்சிறிய அளவே கர்த்தருக்கு செய்வதை நிதானித்து பாராமல், தாங்கள் ஏன் ஆசீர்வதிக்கப் படவில்லை என்பதையே நினைக்கின்றனர். மத். 5,6-ம் அதிகாரத்தை வாசிக்கவும்.

4. நன்மையானவைகளைச் செய்வதற்கு கிறிஸ்தவம் சந்தர்ப்பங்களை அளிக்கிறது. "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியாக கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்". (கலா. 6:2) ஆகையால், நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், "விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்". (கலா. 6:10).

5. எவ்வளவுக்கதிகமாய்க் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கதிகமாய் பெறுவோம் என்பதை கிறிஸ்தவம் போதிக்கிறது. பவுல் கொரிந்து சகோதரர்களுக்கு அறிவுரை கூறும்போது, "பின்னும் நான் சொல்லுகிற தென்னவெனில், சிறுக விதைககிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக் கிறவன் பெருக அறுப்பான்", (2கொரி. 9:6). என்று கூறினார். மேலும் "... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா. 6:7) என்றார். அநேகர் அதிகமாய்க் கர்த்தருக்கு கொடுப்பதில்லை, ஆதலால் பெற்றுக் கொள்ளுவதுமில்லை, இருந்தும் ஏன் தனக்கு கிடைப்பதில்லை என்பது குறித்து ஆச்சரியப்படுகின்றனர்.

6. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியமென்று கிறிஸ்தவம் அறிவிக்கிறது. இதைக் கிறிஸ்துவே கூறியிருக்கிறார். (அப். 20:35). மேலும் அவர், "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்" என்றார் (மத். 10:39).

7. இம்மையிலிருந்து மறுமைக்கு வழிகாட்டுகிறது கிறிஸ்தவம் மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (லூக்கா 6:31) என்று இயேசு போதிக்கிறார். மனுஷன் தன் சத்துருவை சிநேகிக்க வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். (மத். 5:44) தன்னைபோல ஒருவன் பிறனையும் நேசிக்க வேண்டும், (மத். 22:39). கிறிஸ்தவன் உலகத்தில் அன்பு கூரக் கூடாது (1யோவா 5:8), தன்னை பரிசுத்தமாய் காத்துக் கொள்ள வேண்டும் (ரோமர் 12:1) இதன் இறுதி விளைவு சமாதானமும், சந்தோஷமும், நல்ஜீவயமும், நித்திய ஜீவனுமாகும். (கொலே. 1:5). இதற்கு மேலாக ஒருவன் எதைக் கேட்கக்கூடும்.

எனவே கிறிஸ்தவம் என்பது மிகுந்த பிரதிபலன்களை அளிப்பது, ஆனால், எப்படி ஒருவன் அதற்குள் இருக்கிறானோ அதற்கேற்ப அவன் பெறுவான். அதற்குள் எதையும் இடாமல், அதிகமாய் எதையும் அதிலிருந்து எதிர்பாராதிருங்கள். ஆனால், உங்களையே தேவனுக்கு கொடுத்து உங்கள் ஜீவியத்தில் உபதேசம் கிரியை செய்தால், கற்பனைக் கெட்டாத வகையில் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**J.C. Choate** **J.C. சோட்**

## நியாயதீர்ப்பில் வந்து நிற்போர்

| | | |
|---|---|---|
| 1. | சோதோமின் ஜனங்கள் | - மத். 11:23,24 |
| 2. | தென் தேசத்து ராஜஸ்திரீ | - மத். 12:42 |
| 3. | நினிவேயின் ஜனங்கள் | - மத். 12:41 |
| 4. | தீரு, சீதோன் ஜனங்கள் | - மத். 11:21,22 |
| 5. | கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் | - மத். 11:20f |
| 6. | தெசலோனிக்கே பட்டணத்து மக்கள் | - 2 தெச. 1:7-10 |
| 7. | எல்லா ஜனங்களும் | - மத். 25:31-46 |

பெண்கள் பகுதி

# சமாரியா ஸ்திரீ

இயேசு கிறிஸ்து தாம் ஊழியம் செய்து வந்த நாட்களில் ஓரிடத்திலே மாத்திரம் தங்கி ஊழியம் செய்யாமல், பல இடங்களிலும் சுற்றித் திரிந்து தன் பணியை செய்தார். ஒரு சமயம் தன் ஊழியப்பயணத்தில் அவர் யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்குச் செல்ல வேண்டியதாயிருந்தது. பெலஸ்தீனா தேச வரைபடத்தில் பார்க்கும் போது யூதேயா கீழேயும் கலிலேயா மேல் பகுதியிலும் அமைந்திருக்கும். இந்த இருபகுதிகளுக்கும் இடையே **சமாரியா** என்ற நாடு உள்ளது.

அந்நாட்களில் சமாரியர்கள் மற்றவர்களால், குறிப்பாக யூதர்களால் மிகவும் கீழ்த்தரமாகக் கருதப்பட்டுள்ளார்கள். ஏனென்றால் கலப்பின மக்களாக மாறி, யெகோவா வணக்கத்திலிருந்து திசை மாறிப் போய் விட்டார்கள். முதல் 5 ஆகமங்களில் நம்பிக்கை இருந்தாலும் மோசேயின் பிரமாணம் பற்றியெல்லாம் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. இதுபோக இன்னும் பல காரணங்களும் சேர்ந்து கொண்டபடியால் யூதர்கள் இவர்களை முழுப்பகையாய்ப் பகைத்தார்கள். எனவே யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்குச் சென்ற யூதர்கள் சமாரியா வழியே செல்லாமல் சுற்றி யோர்தானைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். ஆனால், பாவிகளை நேசிக்கிற இயேசு கிறிஸ்து சமாரியாவை ஒதுக்கிவிடாமல், சமாரியாவின் வழியாகச் செல்கிறார். அதிகாலையிலே தன் பிரயாணத்தை மேற்கொண்ட நமதாண்டவர் இயேசு கிறிஸ்து சுமார் 6 மணி நேர நடைபயணத்தால் இளைப்படைந்தவராய் யாக்கோபின் கிணற்றினருகே அமருகிறார். (யோவான் 4:6) அப்போதுதான் நம் தலைப்பின் தலைவி சமாரியா ஸ்திரீ வருகிறாள். இயேசு அவளை நோக்கி; "**தாகத்துக்கு தா**" என்றார். இவ்விதமாய் உரையாடல் தொடங்குகிறது.

சரீரத்துக்குரிய கேள்விகளைக் கேட்க ஆரம்பித்த ஆண்டவர் மெல்ல ஆவிக்குரிய காரியங்களுக்குச் சென்று, "உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா" என்றார். தன் கடந்த கால வாழ்வை மறைக்க முயன்ற அவள் நடந்தவைகளை யெல்லாம் வெட்ட வெளிச்சமாக்கிய இயேசுகிறிஸ்துவிடம் இனியும் பொய் சொல்லக்கூடாது என்று எண்ணியவளாய் அவரின் சிறப்புத் தன்மையை முற்றிலும் அங்கீகரித்து ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி என்று கூறிவிடுகிறாள் (யோவான் 4:19).

இயேசுக் கிறிஸ்துவை தீர்க்கதரிசி என்று ஒத்துக்கொண்ட அவள் சம்பாஷணையை ஆன்மீக ரீதியிலே பிரயோஜனமாக மாற்றி "எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுது கொண்டு வந்தார்கள்" என்றாள். இங்கே இவள் குறிப்பிடும் மலை "**கெர்சோம்**" மலை, இந்த மலைக்கு குறைந்தது **மூன்று சிறப்பு தன்மைகள் உண்டு** என சமாரியர் எண்ணினார்.

முதலாவது, தேவன் ஆதாமை படைத்தபோது அவர் பயன்படுத்திய மண் கெர்சோம் மலையின் மண் என்று நம்பினர். இரண்டாவது நோவா காலத்துப் பெருவெள்ளம் இந்த மலையை மூடவில்லை என விசுவாசித்தனர். **மூன்றாவதாக**, யாக்கோபு தேவதூதனோடு போராடினது இந்த கெர்சோம் மலையில் தான் என்பது. ஆக, மூன்று தனிச்சிறப்புகளைக் கொண்டது இந்த மலை. இந்த மலையில் தொழுது கொள்வதை விட்டு விட்டு எருசலேமிலே தொழுது கொள்ள வேண்டுமென்கிறீர்களே? என வினவினாள்.

இயேசு அவளிடம் "எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது" என்கிறார். அவள் மேலும் பக்தி உணர்வை வளர்த்துக் கொண்டு பேச்சை தொடர்கிறாள். தன்னுடன் பேசுகிறவர் சாதாரணமானவர் அல்ல என்பதை உணரத்துவங்கி விட்டாள். சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அதை பிரயோஜனப்படுத்திக் கொண்டாள். இயேசுவின் மகத்துவத்தைக் கண்டவுடன் அவள் "தொழுகை" யைப்பற்றி கேட்டாள். நாம் எப்படி?

25ம் வசனத்தில் பார்க்கும் போது "கிறிஸ்து என்னப்பட்ட மேசியா வருகிறார்" என்று அறிவேன் என்கிறாள். வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களாகிய ஆகமங்களை மாத்திரம் தங்கள் நம்பிக்கை புத்தகங்களாக வைத்திருந்த அந்த சமாரியப் பெண் எப்படி "கிறிஸ்து என்னப்பட்ட மேசியா" என்று சொல்கிறாள்? சமுதாயத்தில் சற்று ஒழுக்கக் குறைவாக நடந்த அந்த ஸ்திரீ நல்ல காரியங்களையும் அறிந்தே வைத்திருந்தாள் என்பதை நாம் கவனிப்பது அவசியம்.

கடைசியாக, அவள் செய்த காரியம் தன்குடத்தை வைத்து விட்டு ஊருக்குள்ளே போனாள். அவரை வந்து பாருங்கள் (யோவான் 4:28,29) என்கிறாள். தான் வந்த வேலையை இரண்டாம் பட்சமாக கருதி, முதலாவது இயேசு கிறிஸ்துவை ஊராருக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஆவலில் ஓடுகிறாள். எது அவசரம், எது அவசியம் என்பதை உணர்ந்து செயல்படுகிறாள்.

இதை வாசிக்கும் அருமைச் சகோதரிகளே! இன்று நம்முடைய நிலை என்ன? தன்னுடன் பேசுகிறவர் கிறிஸ்துதான் என்று அறிந்தவுடன் சரீர பிரகாரமான சம்பாஷணையை மாற்றி ஆவிக்குரிய ரீதியிலே பேசுகிறாளே அந்த ஸ்திரீ. தேவனுடைய மனிதர்கள் வேத வசனங்களை பகுத்துப் போதிக்கும் போது நாம் அவர்களிடம் எதை பேசுகிறோம். எத்தனை பேர் இன்று ஊழியர்களிடம் சென்று தேவையில்லாத சம்பாஷணை நடத்துகிறார்கள்.

அன்றைக்கு அவள் அறிந்திருந்தது கடுகளவு என்றால், இன்றைக்கு நாம் கிறிஸ்துவைப் பற்றி அறிந்திருப்பது கடலளவு ஆகும். தனக்குத் தெரிந்த அறிவைக் கொண்டு கிறிஸ்து என்னப்பட்ட மேசியா வந்து எல்லாவற்றையும் அறிவிப்பார் என்று நம்பிக் கொண்டிருந்தாளே அந்தப் பெண். முழுக்க, முழுக்க வேதத்தைப் படிக்கும் வாய்ப்புப் பெற்ற நாம் நியாயத்தீர்ப்பு, மறுமை, அவருடைய வருகை இவைகளைக் குறித்து நாம் என்ன தெரிந்து வைத்திருக்கிறோம்? நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும் (எபிரெயர் 10:25). நம் உறவினர், குடும்பத்தார், ஊரார், அக்கம் பக்கம் உள்ளவர்கள் யாவருக்கும் அவசரமாய், அவசியமாய் கிறிஸ்துவைப் பற்றிக் கூறவேண்டும்.

42ம் வசனத்தில் பார்ப்போமேயானால், "உன் சொல்லினிமித்தமாக அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" என்கிறார்கள் சமாரியர்கள்.

சாதாரணப் பெண்ணினிமித்தம் சமாரியர்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்டது போல, நம்மூலம் எத்தனை பேரை கிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்திருக்கிறார்கள். சிந்திப்போம், நிச்சயமாக இந்த சமாரியா ஸ்திரீ நமக்கு ஒரு பாடமாக இருப்பாள் என்று நம்புகிறேன். இன்றிலிருந்து நம் வேலை களை, கஷ்டங்களை, பொறுப்புகளைப் பெரிதாய் எண்ணாமல் அவைகளை இறக்கி வைத்துவிட்டு, மக்களை கிறிஸ்துவண்டை அழைத்து வரும் முதல் தரமான வேலையைச் செய்வோம்!.

**ரேச்சல் ராஜநாயகம்**

## தேவனுக்கு கொடுங்கள்

* நாளின் "முதல் மணி" நேரத்தை தேவனுக்குக் கொடுங்கள்.
* வாரத்தின் "முதல் நாளை" தேவனுக்குக் கொடுங்கள்.
* வருமானத்தின் "முதல் பகுதியை" தேவனுக்குக் கொடுங்கள்
* முடிவுகள் எடுக்கும்போது "முதலில்" தேவனுக்கு முன்னுரிமை கொடுங்கள்.
* உங்கள் இருதயத்தில் "முதல் இடத்தை" தேவனுக்குக் கொடுங்கள்.

வாலிபர் பகுதி

# மாயை, மாயை, வாலிபமும் மாயை

என் இனிய வாலிப சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவரையும் சந்திக்கும் திருமறை ஆசான் வாயிலாக சந்திப்பதில் உள்ளார்ந்த மகிழ்ச்சி கொள்ளுகிறேன்.

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கூறி தொடருகிறேன்.

மாயை, மாயை எல்லாம் மாயை (பிர. 1:2) ஞானி சாலமோன், மாயை, மாயை என்று எதையும் கூறாமல், யாரையும் சொல்லாமல், அது இது என்று எதையும் குறிப்பிடாமல் **எல்லாம் மாயை** என்று சொல்லுகிறார். அப்படியானால், இந்த மாயையிலே என் அறிவுக்கும், நினைவுக்கும் எட்டின சில காரியங்களை காணலாம். முதலாவது, நாம் எல்லோரும் இந்த பூவுலகில் பூத்த மலர்கள். ஆனால், இந்த பூவுலகமே மாயை, நம்முடைய வாழ்க்கை மாயை, ரசிப்பதும், ருசிப்பதும், இச்சிப்பதும் மாயை, இன்பமும், துன்பமும் ஆகிய கனவும், நினைவும் மாயை, சிரிப்பதும் அழுவதும் மாயை, இளவயதும், வாலிபமும் மாயை, கண்கள் காண்பதும் செவிகள் கேட்பதும் மாயை. இவைகளில் இளவயதும், வாலிபமும் மாயை என்பதை அறிய நம்முடைய சிந்தனையைத் தொடருவோம்.

## வாலிபம் உன் வாழ்வின் எதிரொலி

என் அன்பு வாலிப சகோதர, சகோதரிகளே, இந்த வாலிபப் பருவத்திலே நீங்கள் எதிரொலி என்பதை எதிர்நோக்காதவர்களாக இருக்கலாம். அல்லது அது உங்கள் இதயத்திற்கு எட்டாத ஒரு புதிராக இருக்கலாம். ஆனாலும் நீங்கள் நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. தயவு செய்து கவனியுங்கள். வாலிபம் உன் வாழ்வின் விதை அது எப்படிப் பட்ட விதை என்பதை உன் கிரியை வெளிப் படுத்தும். அதன் விளைவு இது இனிய கனியா, கசப்பான கனியா என்பது வயோதிக நாட்களில் அது திட்டமாக வெளிப்படும். இன்று அநேக வயோதி கர்கள் தங்கள் வாழ்க்கையின் கசப்பை எண்ணி, எண்ணி, புலம்புகிறார்கள். திரும்பிப் பார்த்தால் தெரிவதென்னவோ வாலிப நாட்களே. இன்றைய வாலிபர்கள் இனிய நாட்களாய் இன்றைய நாட்களை அனுபவிக்கிறார்கள். அன்றைய வாலிபர்கள் இன்றைய நாளிலே அன்றைய நாட்களைக் குறித்து கசப்பாகவும், வெட்கமாகவும் எண்ணுகிறார்களே, காரணம் என்ன? அதுதான் வாலிபத்தின் கசப்பான எதிரொலி, இவர்களெல்லாரும் மனம்போன போக்கிலே போய் மனசும், மாம்சமும் விரும்பினவைகளைச் செய்து உணர்வுக்கும், உலகிற்கும் அடிமைப்பட்டவர்கள், தாய், தந்தையை மதியாதவர்கள், நீதியையும், தர்மத்தையும் எதிர்த்தவர்கள், இப்பொழுது, நிலைதடுமாறி நிம்மதியும், சமாதானமுமின்றி தவிக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அதுதான் வாலிபத்தின் எதிரொலி! வயோதிகத்தில்

இப்படிப்பட்ட நிலை இருக்கு மானால் யார் இதை பிரியமான நாட்களாக ஏற்றுக் கொள்ள முடியும் (பிர. 12:1).

அர்த்தமற்ற உன் பார்வைக்கும், காரணமில்லா உன் சிரிப்பிற்கும் காரணம் உன் வாலிபம் தானே! இந்த வாலிப நாட்களிலே நாம் தேவனை தேடி அவரை பிரியப்படுத்தி வாழ்கின்ற போது, அதின் எதிரொலியே இனிமையானது. வேதத்தில் தேவனுக்கு பயந்து வாழ்ந்த எத்தனையோ வாலிபர்களை பார்க்கிறோம். அவர்களில் இரண்டு பேரை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். **ஈசாக்கு, யோசேப்பு**, இவர்கள் வாலிபத்தின் இச்சை களுக்கும், உலக சந்தோஷங்களுக்கும், தங்கள் மாம்சத்தையும், மனதையும் ஈடுபடுத்தாதவர்கள், இவர்களுடைய வாலிபத்தின் எதிரொலி என்ன? தேவனால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டார்கள். இவர்கள் வாலிபத்தின் நாட்களை கசப்பானதாகக் கழித்தனர். ஆனால், வயோதி கத்திலோ இனிமையாகவும், சமாதானமாகவும் வாழ்ந்தனர். அர்த்தமற்ற பார்வை, காரணமில்லாத சிரிப்பு, பின்னாளிலே சஞ்சலத்தை வருவிக்கும். நீ சஞ்சலத்தையும் தீங்கையும் விட்டு விலகவேண்டுமானால், நீ உன் வாலிபத்திலே தேவனை நினை. (பிரசங்கி. 11:9,10 பிர. 12:1). வாலிபத்திலே நீ செய்யும் ஒவ்வொரு செயலும் வயோதிகத்திலே எதிரொலிக்கும் என்பதை உன் இதயத்திற்கு நினைப்பூட்டு, தேவ பயமில்லா வாலிபம் உன் எதிர்காலத்தில் புலம்பலையும், அழுகையையும் வருவிக்கும் என்பதை அறிந்து கொள்.

## வாலிபம் உன் வாழ்வின் எதிராளி

பிரியமானவர்களே, நான் வாலிபத்தை இப்படிக் குறிப்பிடுவதினாலே வாலிபராகிய உங்களுக்கு நான் எதிராளியல்ல. நம்முடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடைகளாய் பலரை நினைக்கிறோம். பல காரியங்களை குறிப்பிடுகிறோம். ஆனால், உனக்கு நீயே எதிராளி என்பதை நீ அறிய மறுக்கிறாய், உனக்கு நீயே எதிராளி என்பதை என்று நீ உணருகிறாயோ அன்றே நீ ஜாக்கிரதையாகிவிடலாம். உன் வாழ்க்கை உன் கையில் என்ற கருத்தை மனதில் வைத்துக் கொண்டு மனம் போன போக்கில் அநேகர் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை, தன்னம்பிக்கை வளர்க்கும் வார்த்தை யாக அது இருக்கலாம். ஆனால், தேவபயமில்லாத தன்னம்பிக்கை ஒரு போதும் ஆசீர்வாதத்தை கொண்டு வந்து சேர்க்காது. ஆகவே, தேவ பயமில்லாத தன்னம்பிக்கையும், சுயபுத்தியும், மனம் போன போக்கும் உன் வாழ்வின் எதிராளி என்பதை (நீதி. 3:5) அறிந்து கொண்டு கர்த்தரில் நம்பிக்கையாயிரு.

இந்த வாலிப நாட்களில் புத்திமதியை கேட்பதும், ஏற்பதும், வேடிக்கை யாகவும், சொல்பவரை ஏளனமாகவும் பார்க்கத் தோன்றும். உங்கள் இதயத்தை எது ஈர்க்கிறதோ, அதின் பக்கம் சாயும் நேரமிது, அது நன்மையானதாயும் இருக்கலாம், தீமையானதாயும் இருக்கலாம். அதின் எதிரொலி சமாதான மாகவும் இருக்கலாம் அல்லது சஞ்சலமாகவும் இருக்கலாம்.

பாருங்கள் பிரியமானவர்களே! இன்று அநேக தீவிரவாத இயக்கங்கள் மற்றும் அநேக தீவிரவாதிகளும் இருக்கின்றனர். இவர்களெல்லாரும் வாலிபத்தில் தாங்கள் செய்வதும் நினைப்பதும் இன்னதென்று அறியாமல் அதில் சேர்ந்தனர். இன்று வாழ்வா, சாவா என்று போராடுகின்றனர். இனி சமாதானமும், அமைதியும் கனவிலும் கூட அவர்களுக்கு கிடையாது. இப்படிப்பட்ட நிலைக்கு யார் காரணம்? உன் இளமையிலேயே நிதானிக்காததுதான் காரணம். இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நீ தள்ளப்படுவாயானால், வாலிபம் உன் வாழ்வின் எதிராளி என்பதை நிச்சயமாக அறியமுடியும். பலவிதமான கனவுகள் காணும் உங்கள் நெஞ்சங்களை கர்த்தரில் நம்பிக்கை வைத்து அமர்ந்திருக்கச் செய்யுங்கள். அப்பொழுது நிம்மதியும், சமாதானத்தையும் காணமுடியும். (நீதி. 3:26).

மாயை, மாயை என்று எல்லாவற்றையும் காண்பித்த ஞானி சாலமோன் இளவயதையும், வாலிபத்தையும் மட்டும் அந்த பகுதியிலே குறிப்பிடாமல் இளவயதையும், வாலிபத்தையும் மட்டும் தனியே அதே அடைமொழியிட்டு எச்சரிக்கிறார் என்றால் வாலிபம் எவ்வளவு நிலையற்றது. வாலிபம் மாயையிலும் மாயை என்றால் நிச்சயமாகத் தவறில்லை (பிர. 12:7) மாயையிலே தொடங்கி, அதே மாயையிலே முடிக்கிறார் ஞானி சாலமோன். பிறப்பிற்கும், இறப்பிற்குமிடையே நடக்கின்ற அனைத்துக் காரியங்களும் மாயை. ஆனால், தேவனுக்குப் பயப்படும் பயம் மட்டும் நித்தியத்தை நமக்கு கொண்டு வரும். ஆகவே, தேவனுக்கு பயப்படுவது நம்மேல் விழுந்த கடமை. அது வேதனையில்லாத ஆசீர்வாதத்தை, நிம்மதியான வாழ்க்கையை கொண்டு வரும். இந்த வாழ்க்கை பெற்றுக் கொள்ள தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!.

**க. சேகர்,** திருப்பூர்.

## சங்கீதப் புத்தகத்தில் வரும் முக்கிய வார்த்தைகள்

| | |
|---|---|
| *நீதிமான் & நீதி* | *- 120 முறை* |
| *கேள் & கீழ்ப்படி* | *- 65 முறை* |
| *இரட்சி & இரட்சிப்பு* | *- 80 முறை* |
| *துதி* | *- 158 முறை* |
| *இரக்கம்* | *- 93 முறை* |
| *துன்மார்க்கன் & துன்மார்க்கம்* | *- 77 முறை* |
| *எதிரி & பகைவன்* | *- 70 முறை* |

# பழங்கால எழுதும் சாதனங்கள்

சிறுவர் பகுதி

எனதருமை சிறுதம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இம்மாதமும் உங்களோடு கூட தேவனுடைய காரியங்களைக் கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த சிறுவர் பகுதி மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளும் காரியங்கள் உபயோகமாகவே இருக்கும் என நம்புகிறேன்.


சரி, இம்மாதம் பழங்கால எழுதும் சாதனங்களிடமிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ளப்போகிறோம். எழுதுவதற்கு ஏடுகளும், எழுத்துக்களை பதிப்பகங்களில் அச்சடிப்பதும், அச்சடித்த புத்தகங்களைப் பிரிண்ட் செய்து வெளியிடுவதும், நமக்கு இன்றைய காலத்தில் சுலபமான காரியங்களாக ஆகிவிட்டன. ஆனால், இவைகளையெல்லாம் கண்டறிவதற்கு முன் நம் முன்னோர்கள் எப்படி எழுதியிருப்பார்கள்? பேப்பர்கள் கண்டுபிடிக்கப்படாத காலத்தில் எப்படி விஷயங்களை பரிமாறியிருப்பார்கள்?

சரி, யோசிக்க வேண்டாம்! நானே சொல்லி விடுகிறேன். நாம் எப்படி பேப்பரை உபயோகிக்கிறோமோ அதே போல தான் அந்த நாட்களில் பெரிய கற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பெரிய கற்களில் எழுதுவதற்கு அவர்கள் கூர்மையான இரும்பையும், கூர்மையான கற்களையும் பயன்படுத்தினார்கள்.

மோசேயும் பத்து கற்பனைகளை கற்பலகையில் தான் எழுதினார் (யாத் 34:1). நாம் அதை பார்க்க முடியும். அந்த கற்களில் எழுதுவதினால் தலைமுறை தலைமுறைக்கும் இது பயன்படும் என்ற நம்பிக்கை எழுதுகிறவர்களுக்கு ஏற்படுமாம்.

சரி, வேறெந்தெந்த வகையில் அவர்கள் எழுதியிருப்பார்கள் என்றா யோசிக்கிறீர்கள்! பொறுங்கள்! அதையும் நானே சொல்லி விடுகிறேன்.

**களிமண் :** இதை அநேகர் பயன்படுத்தினார்கள். ஏன் என்று கேட்டால், இது எல்லா இடங்களிலும், சுலபமாக கிடைக்கிறதல்லவா? அதினால் தான்! மேலும் இதில் எழுதுவது மிகவும் சுலபமானது. களிமண் ஈரமாக இருக்கும் போது எழுதினால், அது காயந்துவிட்டதற்கு பிற்பாடு அதில் எழுத்துக்கள் நிரந்தரமாக உருமாறாமல் இருக்குமாம். எசேக்கியேல் 4:1ல் "செங்கல்" என்று குறிப்பிடப்பட்டது. களிமண்ணாலே செய்யப்பட்ட செங்கல் தான்.





**பாப்பிரஸ்** : இது முன்னோர்கள் எழுதுவதற்குப் பயன்படுத்தின இன்னொரு பொருள். இது நதியோரங்களிலும், ஏரிகளின் ஓரங்களிலும் வளருகின்ற ஒரு உயரமான செடி யாகும். குறிப்பாக எகிப்து நாட்டின் நைல் நதியில் வளருகிற ஒரு செடி. இந்த செடியின் தண்டை எடுத்து, அதை பேப்பர் போல தட்டி சமமாக்கி, அதை ஒட்டி ஒரு பெரிய பேப்பர் போல் செய்து விடுவார்களாம்.

அந்த பெரிய பேப்பரை சுருட்டி சுருள் களை செய்வார்களாம் (வெளி 5:1) புத்தகம் என்று சொல்லப்பட்டது புத்தக சுருளை (பாப் பிரஸ்) குறிக்கிறது. புதிய ஏற்பாட்டை எழுதின வர்களும், அப்போஸ்தலர்களும் இதையே பயன்படுத்தினர்.

இன்னும் தோல், எலும்பு, ஓடுகள், மரம் போன்ற இவைகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் முன்னே குறிப்பிட்டவைகள் தான் பெரும்பாலாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பாருங்கள்! தேவனுடைய மனிதர்கள் நமக்கு உண்மையான வார்த்தைகளை தர சிரமப்பட்டிருக்கிறார்கள். நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள். நாம் தேவனுக்கும், நமக்கு எழுதிக் கொடுத்தவர்களுக்கும் நன்றியுள்ளவர்களாய் இருப்பது மிகவும் அவசியம்.

**R.A.R. NAYAGAM**

## விருத்தசேதனத்தை தேவன் ஏன் எட்டாம் நாளில் கட்டளையிட்டார்?

**ஆண் குழந்தைக்கு 5-7 நாளில் இருப்பதைவிட 8-ம் நாளில் குழந்தையின் உடலில் வைட்டமின் "K" அதிகரித்து விடுகிறது. அந்த நாளில் இரத்தம் உறைதலின் தன்மையும் அதிகரிக்கிறது. இது, இன்றைய நவீன மருத்துவக் கண்டுபிடிப்பு. ஆனால், தேவன் அன்றே இதை அறிந்து கட்டளையிட்டுள்ளார். வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு [ஆதி. 17:11].**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

புதிய ஏற்பாடு பற்றிய நம்முடைய பாடத்தில், கிறிஸ்து நம்மை ஆவிக்குரிய பாடல்கள் பாடுவதற்கு மாத்திரம் அங்கீகாரமளித்திருக்கிறார் என்று கற்றோம். பாடல்கள் பாடும்போது, இசைக் கருவிகளைச் சேர்த்து பாடுவதற்கு புதிய ஏற்பாட்டில் எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை.

கடந்த மாதத்தில், தேவன் ஒன்றைச் செய்யும்படி சொல்லிவிட்டால், மற்ற எல்லாவற்றையும் அது புறந்தள்ளி விடுகிறது என்றும், சொல்லப்படாத ஒன்றைச் செய்வது பாவமென்று பார்த்தோம். பழைய ஏற்பாட்டில் கூட இதற்குப் பல உதாரணங்களைப் பார்க்க முடியுமென்று பார்த்தோம். அவைகளில் இரண்டை நாம் இப்பொழுது பார்ப்போம்.

ஆதி 6:4 வாசிக்கவும். இங்கே பேழை கட்டுவது சம்பந்தமாக தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டார். இதிலே, கீழ்வரும் மிக முக்கியமான கருத்துக்களைக் கவனியுங்கள்.

தேவன் நோவாவுக்கு **ஒரு குறிப்பிட்ட** வகை மரத்தைப் பயன்படுத்தும்படி சொன்னார். கொப்பேர் மரம் என்று தேவன் **குறிப்பாகச்** சொன்னார். இப்படித் தேவன் **குறிப்பாக** கொப்பேர் மரம் என்று சொல்லியிருப்பது மற்ற எல்லா வகை மரங்களையும் அது **புறந்தள்ளி** விடுகிறது. தேவன் இங்கே இந்த வகை மரம் வேண்டாம், அந்த வகை மரம் வேண்டாமென்றெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

இது போலவே, நாம் ஆவிக்குரிய பாடல்களைப் பாட வேண்டுமென்று கிறிஸ்து சொல்லும்போது, நாம் ஆவிக்குரிய பாடல்களைப் பாடும்போது, இசைக் கருவிகளை உபயோகிக்கக் கூடாது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை.

**ஆதி 6:22 வாசிக்கவும்.** நோவா, தேவன் தனக்குக் குறிப்பிட்டதையும், தேவன் தனக்குக் கட்டளையிட்ட **எல்லாவற்றையும்** செய்து முடித்தான். நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்ததற்கான காரணங்களில் இதுவும் ஒன்று (ஆதி. 6:8).

**லேவி 10:1,2 வாசிக்கவும்.** இப்பகுதி நமக்குப் பயத்தைக் கொடுக்கும் ஓர் உதாரணம். ஆசாரிய ஊழியம் செய்த நாதாபும், அபியுவும் குமாரர்கள். ஆரோனின் குமாரர்களாக இவர்கள் இருந்தபடியால், தேவனைத் தொழுது கொள்ளுதல் சம்பந்தமாக, மோசேயின் பிரமாணங்களனைத்தும் இவர்களுக்குப் போதிக்கப்பட்டிருக்கும். அப்பிரமாணங்களில், இஸ்ரவேல் ஜனங்கள் அவரை எப்படித் தொழுது கொள்ள வேண்டுமென்று, தேவன் **குறிப்பாகச்** சொல்லியிருந்தார்.

ஆனால், நாதாபும், அபியூவும் என்ன செய்தார்கள்? கர்த்தருக்கு முன்பாக அந்நிய அக்கினி செலுத்தினார்கள். இது தேவன் சொன்ன **பரிசுத்த** வகை அக்கினி **அல்ல**. உண்மையில் இது பொதுவான அல்லது அந்நிய அக்கினி! அங்கே, நாதாபும், அபியூவும் செலுத்தியது "கட்டளையிடப்படாத அக்கினி". அருமையானவர்களே, அங்கே சொல்லப்பட்டிருக்கும் வார்த்தை களைக் கவனியுங்கள். அந்த அக்கினி தேவன் **வேண்டாமென்று** சொன்ன அக்கினி அல்ல. பிரச்சனை அதுவல்ல.

அப்படியானால், பிரச்சனை எது? நாதாபும், அபியூவும் கர்த்தர் தங்களுக்குக் **கட்டளையிடாத** அக்கினியைச் செலுத்தினார்கள். அதாவது, அந்த இருவரும், தேவன் அங்கீகரிக்காத அக்கினியைச் செலுத்தினார் கள். அவர்கள் கொண்டு வந்த அக்கினியை தேவன் **கட்டளையிடவில்லை.**

இதிலிருந்து என்ன தெரிகிறது? தேவன் **குறிப்பிட்ட** வகை அக்கினியைச் சொல்லியிருந்தார். தேவன் அப்படிச் சொல்லும் போது மற்ற எல்லாவகை அக்கினியும் தானாகவே புறம்பானதாக மாறிவிடுகிறது. இருப்பினும், நாதாபும், அபியூவும் வேறு அக்கினியைச் செலுத்தும்படி தெரிந்து கொண்டார். அப்படிச் செய்தபோது, தேவனுக்கு விரோதமாகப் **பாவம்** செய்தனர். அவர்கள் செலுத்திய அக்கினியைத் தேவன் குறிப்பாகத் தடை செய்யாத நிலையிலும், தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தனர்.

இப்பொழுது, இந்தக் கருத்தை, ஆராதனையில் எப்படிப்பட்ட இசையை பயன்படுத்த வேண்டுமென்பதோடு சம்பந்தப்படுத்திப் பாருங்கள். உண்மையில் தேவன் **குறிப்பாக,** பாடல் மட்டும் என்றே கட்டளை கொடுத் துள்ளார். அதாவது, இசைக் கருவிகள் இல்லாமல் பாடுங்கள் என்று. ஒரு தனிப் பட்ட நபரோ அல்லது ஒரு சபையோ, பாடல்களைப் பாடும்போது இசைக் கருவிகளைப் பயன்படுத்தினால், நாதாப், அபியூ செய்தது போல, **தேவன் தங்களுக்குக் கட்டளையிடாதவைகளைச்** செய்கிறவர்களாகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நாதாப், அபியூபோல தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். ஆவிக்குரிய பாடல் பாடும்போது, இசைக் கருவிகள் வேண்டாமென்று தேவன் சொல்லாத நிலையிலும் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

வசனம் 2-ல் தேவன் குறிப்பாகச் சொல்வதையும், தேவன் கட்டளையிடுவதை மாத்திரம் செய்வது எவ்வளவு முக்கியமானது என்று பார்க்கிறோம். நாதாபும், அபியுவும், தேவனைத் தொழுது கொள்ளுகிற காரியத்தில் பாவம் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்தபோது என்ன நடந்தது? அக்கினி **தேவ சந்நிதியிலிருந்து** புறப்பட்டது. புறப்பட்ட அக்கினி என்ன செய்தது? ஆரோனின் குமாரர் இருவரையும் **பட்சித்துப் போட்டது.** இருவரும் தேவ சந்நிதியில் **செத்துப்**போனார்கள்.

அருமையானவர்களே, தேவனை ஆராதிக்கிற காரியத்தில், அவர் எதைச் சொல்லியிருக்கிறாரோ அதைச் செய்யாதபோது, நம்முடைய அன்பான தேவனின் **கோபம்** பற்றி எரிகிறது!!. இந்த உண்மை, தேவன்

ஆராதனைக்காக எதைச் செய்யும்படியாகச் சொல்லி யிருக்கிறாரோ அதை மாத்திரம் செய்ய நமக்குப் புத்தி கற்பிக்க வேண்டும். கூடுதலாகவோ, குறைவாகவோ செய்யக்கூடாது! நானும், நீங்களும் தேவனை ஆராதிக்க முயற்சிக்கும் போது, அவர் கட்டளையிடாததைச் செய்தால், நாம் அவருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களாயிருப்போம். அதற்கான தேவ கோபத்தையும் பெற்றுக்கொள்வோம்.

இப்பொழுது, நித்திய முக்கியமான இக்கருத்தை, தேவ ஆராதனையில் பயன்படுத்த வேண்டிய இசையோடு பொருத்திப் பார்ப்போம். புதிய ஏற்பாடு பற்றிய நம்முடைய பாடம், நாம் ஆவிக்குரிய பாடல்களைப் பாடும் போது, இசைக் கருவிகள் இல்லாமல் பாடவேண்டுமென்பதை நமக்கு வெளிப்படுத்தியது. ஆகவே, ஆவிக்குரிய பாடலோடு இசைக்கருவிகளைச் சேர்த்தால், தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறோம், அதன் மூலம் அவரின் கோபத்தைப் பெற்றுக் கொள்ளுகிறோம். இப்படிப்பட்ட பாவத்திலிருந்து நாம் மனந்திரும்பி, தேவனோடு நம்முடைய காரியங்களைச் சரி செய்யாவிட்டால், அவருடைய கோபத்திற்கு ஆளாவோம்.

**இப்பொழுது, இங்கே இன்னொரு கேள்வி**

தேனை ஆராதிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய இசை சம்பந்தமாக அவர் குறிப்பான அல்லது பொதுவான கட்டளை கொடுத்திருக்கிறாரா?

பாடும்போது இசைக்கருவிகளை இசைத்துப் பாடுங்கள் என்று தேவன் சொல்லியிருக்க முடியும். அல்லது தேவன், பாடுங்கள் என்று மாத்திரம் சொல்லியிருக்க முடியும்.

அல்லது தேவன், இசைக்கருவிகளை மாத்திரம் பயன்படுத்துங்கள் என்று கட்டளையிட்டிருக்க முடியும்.

நாம் பார்த்த **ஒவ்வொரு வசனத்திலும்** தேவன் என்ன சொன்னார்? பாடுங்கள் என்று தான் ஒவ்வொரு வசனத்திலும் **குறிப்பாக** சொல்லியுள்ளார். ஆகவே, இசைக்கருவிகள் புறம்பாக்கப்பட்டுள்ளது. அதை பயன்படுத்துவது தேவனுடைய பார்வையில் பாவம்.

புதிய ஏற்பாடு பற்றிய நம்முடைய பாடம். ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க கூடி வந்த போது, கீழ்க்கண்டவைகளைச் செய்தார் களென்று காட்டுகிறது.

★ ஒவ்வொரு வாரத்திலும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள்.

★ ஒவ்வொரு வாரத்திலும் எதையாகிலும் தங்களிடமிருந்து கொடுத்தார்கள்.

★ ஜெபித்தார்கள்.

★ தேவனுடைய வல்லமையான வார்த்தையைப் போதித்துப் பிரசங்கித் தார்கள்.

★ இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல் ஆவிக்குரிய பாடல்களைப் பாடினார்கள்.

தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பதற்கும், அவரைப் பிரியப்படுத்துவதற்கும், நானும், நீங்களும், இதே விதமாகத்தான் செய்ய வேண்டும்!

புதிய ஏற்பாட்டிலுள்ள சபையும், அதன் **ஆளுகை அமைப்பு** சம்பந்தப்பட்ட காரியத்தில் தனித்துவம் வாய்ந்தது.

புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் ஒன்றான மெய்ச் சபையின் எளிமையான ஆளுகை அமைப்பைப் பாருங்கள்.

**(முதலாவது கிறிஸ்து சபையின் தலைவர்**

**கொலோ 1:18 வாசிக்கவும்.** சபையாகிய ஆவிக்குரிய சரீரத்திற்கு கிறிஸ்து மாத்திரம் தலையாயிருக்கிறார்.

**எபே 1:22,23 வாசிக்கவும்,** எல்லாவற்றுக்கும் கிறிஸ்துவே தலையாயிருக்கிறார்.

இதன் பொருள் என்ன?

முதலாவது, சபைக்கு பூமிக்குரிய **தலைமையகம்** இல்லை. இயேசு சபைக்குத் தலைவர். அவர் பரலோகத்தில் இருக்கிறார். ஆகவே, அவருடைய ஒன்றான சபைக்கான தலைமையகம் ரோமிலோ, இந்தியாவிலோ, அமெரிக்காவிலோ வேறு எந்த நாட்டிலோ இல்லை. பூமியிலே தலைமையகம் கொண்ட சபை, கிறிஸ்துவின் சபை அல்ல.

கர்த்தருக்குச் சித்தமானால், அவருடைய ஒன்றான மெய்ச்சபையின் ஒரே தலைவர் இயேசு தான் என்று பார்ப்போம். அதுவரை நாம் ஒவ்வொருவரும் அந்தச் சபையில் அங்கமாக இருக்கிறோமா என்பதையும், அந்தச் சபையில் இருந்து தேவனை ஆவியோடும், உண்மையோடும் துதிக்கிறோமா என்று உறுதி செய்து கொள்ளுவோம்.

**RAJANAYAGAM**

**Bro. சார்லி**

## கொடுத்தலின் குணாதிசயங்கள்

1. வாரத்தின் முதல் நாள் தோறும் (1கொரி. 16:2)
2. ஒவ்வொருவரும் (1கொரி. 16:2)
3. வரவுக்குத்தக்கதாக (1 கொரி 16:2)
4. நோக்கத்தோடு (1கொரி 16:2)
5. உற்சாகமாய் (2 கொரி 9:7)
6. ஆயத்தயமாய் (2 கொரி 8:12)
7. தாராளமாய் (2 கொரி 9:6)
8. திட்டமிட்டு (2 கொரி 9:1,2)
9. நியமித்து நீங்கள் எப்படிக் கொடுக்கிறீர்கள்? (2 கொரி 9:7)

# அந்நிய பாஷைகளைக் கற்றுக்கொள்வோம்

## சென்ற மாத இதழ் தொடர்ச்சி

பனிரெண்டு அப்போஸ்தலர்களும் பேசினது அங்கே இருந்த பதினேழு நாட்டவருக்கும் தங்கள் மொழியிலே பேசுகிறார்கள் என்று தெளிவாக புரிந்து இருக்கிறது. இன்றைக்கு அந்நிய பாஷையில் பேசுகிறேன் என்று கூறுகிறார்கள். அவர்கள் பேசுவது நமக்கு சுத்தமாக (ஒரு வார்த்தையும்) புரிவது இல்லை, நாம் ஏன் நமக்கு புரியவில்லை என்று கேட்டால் உங்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லை ஆகையால் உங்களுக்கு புரியாது என்கிறார்கள். நீங்கள் யோசித்து பாருங்கள் அங்கே கூடியிருந்த 17 நாட்ட வருக்கும் என்ன பரிசுத்த ஆவியின் அபிஷேகம் முன்னதாகவே கொடுக்கப் பட்டு இருந்ததா? அப்போஸ்தலர்கள் பேசக்கூடிய பாஷைகளை புரிந்து கொள்வதற்கு! அப்படியில்லை ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியான வரின் கிரியைகளை அங்கே இருந்த அநேகர் என்ன சொன்னார்கள் என்று பரிசுத்த ஆவியானவரே "இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்க ளென்றும் பரியாசம் பண்ணினார்கள்" (அப். 1:13) என்கிறார்.

மேலே சொல்லப்பட்ட காரியங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பாடம் என்னவென்றால் அந்நிய பாஷைகள் என்பது விளங்காத மொழியல்லவென்றும் அது உலகத்தில் மனிதர்கள் பேசும் பற்பல பாஷை களை நாம் பேச முடியாது எப்படியெனில் பரதீசுக்குள் பேசக்கூடிய வார்த்தை களையே நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்று பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு சொல்லும்போது, அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப் பட்டு மனுஷர் பேசப்படாததும், வாக்குக்கொட்டாதது மாகிய வார்த்தை களைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன் (2கொரி. 12:3) என்று விளம்பி யிருக்கிறார். பரதீசியில் பேசக்கூடிய வார்த்தைகளையே மனுஷரால் பேச முடியாது என்று பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவரே திட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறார். அப்படியிருக்க தேவ பாஷைகளை (பரலோக பாஷை) எப்படி பேச முடியும். ஆகையால், அந்நிய பாஷைகளை பேசுகிறேன் என்று சொல்கிறவர்கள் இவ்வேத வசனங்களை படித்து சத்தியங்களை யோசித்து பாருங்கள்.

### பற்பல பாஷைகள் பேசக்கூடிய வரத்தை (மற்ற எட்டு வரங்கள் உட்பட) எப்படி பெற்றுக் கொள்ள முடியும்

முதல் நூற்றாண்டு காலத்தில் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபையின் சத்தியம் உலகமுழுவதும் கொண்டு போகப்பட்டது. அது எப்படியென்றால் கிறிஸ்து தேர்ந்தெடுத்த 13 அப்போஸ்தலர்களை (பவுல் உட்பட) கொண்டு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இந்த அப்போஸ் தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் (கிறிஸ்து இவர்களுக்கு

மட்டுமே வாக்குத்தத்தம் செய்திருந்தார் (லூக். 24:49) புற ஜாதிகளையும் தேவன் ஏற்றுக் கொண்டார் என்பதற்கு அடையாளமாக கொர்நேலியு வீட்டாருக்கு மட்டும் (அப். 10 அதிகாரம்) கொடுக்கப்பட்டது. பெற்றபோது இவர்களுக்கு ஆவிக்குரிய வரமாகிய ஒன்பது வரங்களும் இவர்களுக்குள் (அப்போஸ்தலர்கள்) முழுமையாக கொடுக்கப்பட்டது (1கொரி. 12:8-10) இந்த வரங்கள் அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் சத்தியத்தை கொண்டு போகவும் சபையை கட்டவும் பலப்படுத்தவும் பயன்பட்டது.

முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை அறிவித்து ஜனங்கள் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறுகின்ற போது, அவர்கள் தலையின் மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வரத்தை கொடுப்பார்கள். பரிசுத்த ஆவியானவர் அந்த சபைக்கு என்ன வரங்கள் அவசியமாக இருக்கிறதோ அதைக் கொடுப்பார். இதைக் குறித்து வேதாகமம் இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார் (1கொரி 12:11) என்கிறது இங்கு கவனிக்க வேண்டிய விசயம் என்ன வென்றால் அப்போஸ்தலர்கள் விசுவாசிகள் மீது கைகளை வைக்கவில்லை யென்றால் அவர்களுக்கு எந்த வரமும் கிடைக்காது, சபையிலே விசுவாசி களாய் இருந்த பிலிப்புவும், ஸ்தோவானும் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததினால் தான் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையை பெற்று இருந்தார்கள் (வாசிக்கவும் அப். 6:5,8; 8:5-8; 19:6).

பிலிப்பு சமாரிய பட்டணத்தில் சுவிசேஷத்தை அறிவித்து அநேகர் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு இரட்சிக்கப்பட்ட போது அவனால் ஆவிக்குரிய வரங்களை கொடுக்க முடியவில்லை. எனவே தான் எருசலே மிலிருந்த அப்போஸ்தலர்கள், அப்போஸ்தலர்களாகிய பேதுரு வையும், யோவானையும் வரங்களை விசுவாசிகளுக்கு கொடுக்க சமாரிய பட்டணத்திற்கு அனுப்பி வைத்தார்கள். சமாரியாவில் இரட்சிக்கப் பட்ட விசுவாசிகளின் மீது பேதுருவும் யோவானும் அவர்கள் தலையில் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வரத்தைக் கொடுத்தார்கள். (அப். 8:14-17).

அதே நேரத்தில் மாய வித்தைக்காரனாகிய சீமோன் அப்போஸ்தலர் களிடத்தில் பணத்தை கொடுத்து நான் எவன் மேல் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று (அப். 8:19) கேட்டான். ஏனெனில், பரிசுத்த ஆவியை பிலிப்புவால் கொடுக்க முடியாது என்பதையும் அப்போஸ்தலர்கள் மட்டுமே கொடுக்க முடியும் என்பதை சீமோன் அறிந்ததினாலே தான் பணத்தை பிலிப்புவிடம் கொடுக்காமல் அப்போஸ்தலர்களிடம் கொடுத்தான். ஆனால், அவன் அப்போஸ்தலர்களாலே சபித்து புறம்பே தள்ளப்பட்டான் (அப். 8:20-23).

ஆகையால் நாம் ஆவிக்குரிய எந்த வரங்களை பெற்றுக் கொள்வதாக (அந்நிய பாஷை உட்பட) இருந்தாலும் அப்போஸ்தலர்கள் நம்மீது கை வைத்தால் தான் முடியும். இன்றைக்கு எந்த அப்போஸ்தலர்கள் உயிரோடு இருக்கிறார், யாரும் இன்றைக்கு இல்லை முதல் நூற்றாண்டுக்குள்ளேயே மரித்து போய் விட்டார்கள், அதனால்தான் முதல் நூற்றாண்டு காலத்தில் பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு இவ்வரங்களை குறித்து எழுதும் போது குறைவான வரங்கள் என்றும்.... தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானலும் ஒய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம், நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது (1கொரி 13:8,9) என்கிறார்.

ஏனெனில் அப்போஸ்தலர்கள் யார்மீதெல்லாம் கைகளை வைத்து வரத்தை கொடுத்தார்களோ அவர்கள் மரிக்கும் வரைக்கும் அல்லது அப்போஸ்தலர்கள் மரிக்கும் வரைக்கும் வரங்கள் உயிரோடு இருக்கும். அவர்கள் மரித்த பிற்பாடு அவர்களுக்குள் இருக்கக் கூடிய வரங்களும் அவர்களோடு முடிவு பெறும். வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதின கடைசி அப்போஸ்தலன் யோவான் (கி.பி. 90-95) யார் மீதெல்லாம் கைகளை வைத்து ஆவிக்குரிய வரத்தை கொடுத்தாரோ அவர்களும், அவரும் மரித்த போது வரங்களும் முடிவுக்கு வந்தன.

**அற்புத வரங்களின் (அந்நிய பாஷைகள் உட்பட) நோக்கம் என்ன?**

பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வரங்களின் நோக்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார் அது என்னவென்றால் சபை பக்தி விருத்தி (கட்டப்படவேண்டும்) அடைய வேண்டும் என்பதே. அது எப்படியென்று பரிசுத்த ஆவியானவர் கூறுவதை பாருங்கள் மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்து வினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் சபையானது பக்தி விருத்தி அடைவதற்காக (எபே. 4:11,12, 1கொரி. 12:28-30, எபி. 2:3,4) இவ்வரங்களை கொடுத்து இருக்கிறார். அநேகர் இன்றைக்கும் இந்த வரங்கள் இருக்கிறது என்கிறார்கள் அதற்கு ஆதாரமாக அன்பைப் பற்றியதான அதிகாரத்தில் நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்துபோம் (1கொரி. 10:10) என்ற வசனத்தை பயன்படுத்தி கிறிஸ்துவின் வருகை நிறைவானது ஆகையால் அவர் வரும் வரைக்கும் இந்த வரங்கள் இருக்கும் என்று பிரசங்கம் செய்கிறார்கள்.

இங்கு "நிறைவானது" என்பது பூரண பிரமாணமாகிய கிறிஸ்துவின் பிரமாணத்தை (புதிய ஏற்பாடு) (யாக். 1:25) குறிக்கிறதே தவிர கிறிஸ்துவின் வருகையை குறிப்பது இல்லை. ஏனென்றால், முதல் நூற்றாண்டு காலத்தில்

சுவிசேஷ புத்தகங்களும், பவுலின் நிருபங்களும், பொதுவான நிருபங்களும், தீர்க்கதரிசன புத்தகமும் வெவ்வேறு காலகட்டத்தில் (வருஷத்தில்) எழுதப் பட்டுக் கொண்டு இருந்தன. ஆகையால், புதிய ஏற்பாடு புத்தகங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருந்தது. ஆகையால் கொரிந்து பட்டணத்தின் சபைகளுக்கு எழுதப்பட்டது என்னவென்று எபேசு பட்டணத்து சபைகளுக்கு உடனடியாக அறிய முடியவில்லை.

அதனால்தான் பவுல் கொலோசெ பட்டணத்து சபைக்கு நிருபத்தை எழுதி அனுப்பும் போது "இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்ட பின்பு இது லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள், லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள்" (கொலோ 4:16) என்று அறிவுறுத்துகிறார். ஆகையால், புதிய ஏற்பாடு முழுமையாக எல்லோருடைய கைகளிலும் கிடைக்காததால் இந்த ஆவிக் குரிய வரங்களினால் (ஒன்பது வரங்கள்) எல்லா கிறிஸ்துவின் சபைகளிலும் ஒரே காரியத்தை பேசியும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருந்தார்கள் (1கொரி. 1:10).

புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம் (கி.பி. 90-95) அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதி முடிக்கப்பட்ட பிறகு அவருடைய மரணத்திற்கு பிறகு புதிய ஏற்பாடு ஒன்றிணைத்து (27 புத்தகங்கள்) கிறிஸ்தவர்களின் கைகளில் முழுமையாக கிடைத்தபோது ஆவிக்குரிய வரங்கள் அவசியமில்லாமல் முடிந்து போயிருந்தது (1கொரி 13:8-10). இப்போது நம்முடைய கைகளில் கிறிஸ்துவின் பிரமாணமாகிய பூரண (நிறைவான) பிரமாணம் இருக்கிறது (புதிய ஏற்பாடு) இப் பிரமாணத்தை குறித்து பரிசுத்த ஆவியானவர் "சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிற வனா யிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக். 1:25) என்கிறார். இன்றைக்கு நாம் எந்த தேசத்திற்கு சென்று எந்த மொழியில் வேதாகமத்தின் வசனத்தைப் பார்த்தாலும் ஒரே சத்தியம் (சுவிசேஷம்) தான் இருக்கும். ஆகவே, இன்றைக்கும் நாம் ஒரே காரியத்தை பேசவும் பிரிவினை களில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உடையவர்களாய் சீர்பொருந்தி இருக்க வேண்டும். ஆனால், இன்றைக்கு கிறிஸ்து கொடுத்த பூரண பிரமாணத்தை தள்ளிவிட்டு குறைவான முடிந்து போன வரங்களுக் காக காத்து கிடப்பது நம்மை நாமே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறோம் என்பதேயே காட்டுகிறது.

ஆகையால், பிரியமானவர்களே பூரண பிரமாணத்தின் சத்தியத்தை ஆராயந்து பார்த்து கற்றுக் கொண்டு ஆவிக்குரிய ரீதியில் பூரண புருஷராக முயற்சி செய்ய வேண்டும்.

**அந்நிய பாஷைகளைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு கொரிந்து பட்டணத்து கிறிஸ்துவின் சபைகளுக்கு வெளிப் படுத்தியதை கவனியுங்கள் (14 அதிகாரம்).**

1. அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாக பேசுகிறான் (சபைக்கு அல்ல) (14:4).
2. அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்தி விருத்தி உண்டாகும்படி அர்த்தத்தையும் சொல்ல வேண்டும் (5 வசனம்)
3. சகோதரரே, நான் (பவுல்) உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங் களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்க தரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல் அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன? (6 வச).
4. நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப் பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர் களாயிருப்பீர்களே. (9வச)
5. நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்குமே (14 வச)
6. நான் சபையிலே அந்நிய பாஷையில் (பற்பல பாஷைகள்) பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் மற்றவர்கள் உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு (பவுல்) அதிக விருப்பமாயிருக்கும் (19 வச)
7. அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவ்விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. (22வச)
8. சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடி வந்து எல்லாரும் அந்நிய பாஷை களிலே பேசிக் கொள்ளும்போது கல்லாதவர்களாவது, அவிசுவாசி களாவது உள்ளே பிரவேசித்தால் அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்கள் என்பார்களல்லவா? (23 வச) என்று பவுல் எழுதுகிறார்.

இந்த கொரிந்து பட்டணம் பெரும் வியாபார பட்டணமாக இருந்தபடியால் அநேக நாடுகளைச் சேர்ந்தவர்களும் அநேக மொழிகளை (பாஷைகள்) பேசக் கூடியவர்கள் இங்கு வியாபாரம் செய்வதற்கு வருவார்கள். ஆகையால், இங்கு இருந்த சபைகளுக்கு பலவித பாஷைகள் பேசக்கூடிய வரத்தை பரிசுத்த ஆவியானவராலே அதிகமாக கொடுக்கப் பட்டது. ஆகையால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் அந்நிய பாஷைகளை குறித்து பதினான்காம் அதிகாரம் முழுவதும் எழுதியிருக்கிறார்.

**N. பர்னபாஸ்,** திருப்பூர்.

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

திருமறை ஆசான் வாசக அன்பு உள்ளங்களே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் புனித நாமத்தினாலே வாழ்த்துகிறேன். மீண்டுமாக உங்களோடு சேர்ந்து நானும் "**இரத்த சாட்சிகள்**" தொடரை படிப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மாதம் அப்போஸ்தலனாகிய யாக்கோபுவின் ஊழியத்தைக் குறித்து கொஞ்சம் பார்த்தோம். தொடர்ந்து ஊழியத்தைக் குறித்து சிலவற்றைப் பார்ப்போம். ஊழியம் என்பது சேவை, பணி விடை, தொண்டு செய்வது போன்ற காரியங்களாகும். இவைகளைச் செய்வதற்கு தன்னையே அர்பணிக்க வேண்டும். அதாவது, நம் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1). இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை அதாவது ஊழியம், ஆனால், இன்றைய நாட்களில் ஊழியம் என்ற பெயரில் ஊழல்கள் பெரிய அளவில் நடந்து வருகிறது. சுனாமி வந்ததற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட ஊழல்கள் நிறையக் காணப்படுகிறது. எனவே தான் போலி பிஷப்புகளின் செயல்கள் எல்லாம் தோலுரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் சுனாமி எனக் கேள்விப்பட்டவுடனே அநேகர் அமெரிக்காவிலிருந்து கோடிக்கணக்கான காசோலைகளை அனுப்பினர். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கே எல்லா முழுத் தொகையையும் போய் சேர வேண்டும். இதற்கு அரசு வரிவிலக்கு அளித்தது. இதை அறிந்து கோடிக்கணக்கான பணத்துக்கு சில ஊழியர்கள் பொறுப்பேற்றனர். உண்மையும், உத்தமுமாய் செயல்பட வேண்டியவர்கள் பண ஆசைக்கு விழுந்தனர். சுனாமி பெயரில் தாங்கள் சொகுசான வாழ்க்கையை தேடிக் கொண்டார்கள். ஆனால் முடிவு என்னவாயிற்று? தாங்கள் அவமானப்பட்டு சந்தி சிரிக்க செய்தனர்! இது அல்ல ஊழியம் பண ஆசை எல்லா தீமைக்கும் வேர் (1தீமோ 6:10) என்பதை உணர்ந்து தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவை பின்பற்றுவதே ஊழியனின் கடமையன்றோ! (மத். 10:37,38) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றாதவர்கள் மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ அவர்கள் தங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதவர்கள் என்று வேதம் கூறுகிறது (கலா. 6:12).

கர்த்தருக்கு ஊழியம் செய்தால் கார், ஏர்கண்டிஷன் பங்களா, ஆடம்பர வாழ்க்கை போன்றவை கிடைக்கும் என்ற எண்ணத்தில் இயேசுவைப்

பின்பற்றுவது மதியீனம்! இப்படிப்பட்ட எண்ணத்தோடு அதாவது, சரீரத் தேவைகளை முதன்மையாக வைத்துப் பின்பற்றினவனைக் கவனியுங்கள்! அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி ஆண்டவரே நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான் அதற்கு இயேசு நரிகளுக்கு குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்றார் (லூக். 9:57,58) இந்த சம்பவத்தில் வரும் மனிதன் தனக்கு குடியிருக்க வீடு, வசதி போன்றவற்றை முதன்மையாக வைத்து இயேசுவைப் பின்பற்றி யிருக்கிறான். நாம் முதலாவது தேவனுக்கும் அவருடைய இராஜ்ஜியத் திற்கும் அவருயை நீதியாகிய வேத வசனத்திற்கும் முதலிடம் கொடுக்க வேண்டும் (மத். 6:33) தேவனைத் தவிர அல்லது கிறிஸ்துவையும் அவரது சபையையும் தவிர எதுவுமே முதலிடம் இருக்கக்கூடாது ஆண்டவர் இயேசு கூறுவதைப் பாருங்கள் என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரை யாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் அடைந்து கொள்ளுவான் (மத் 19:29) நாம் அவருக்கு முதலிடம் கொடுக்கும் போது கிறிஸ்துவுக்காக எவைகளை இழந்தோமோ அவைகளை நூறத்தனையாய் பெற்றுக் கொண்டு நித்திய வாழ்வையும் பெற்றுக் கொள்வோம்.

ஆனால், இன்று இவைகள் எல்லாம் தலைகீழாக இருக்கிறது! தங்கள் சரீர இச்சைகளையே முதன்மையாக வைத்து ஊழியம் செய்கின்றனர். தங்களுடைய சொகுசான வாழ்க்கைக்கு நிறைய சொத்துக்களைக் குவித்து வைத்துள்ளனர். ஆனால், தேவன் இவைகளுக்கெல்லாம் கணக்கு கேட்பார் நிச்சயம் பதில் சொல்லியாக வேண்டும். ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பான் (ரோம 14:12) எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும் (லூக் 12:48) அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறு ஒருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால் உங்களுக்கு யாதொன்றைச் சொந்த மாகக் கொடுப்பவன் யார்? எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களாலே கூடாது என்றார் இயேசு (லூக். 16:10-13).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மத். 20:28) ஊழியம் என்பது பணத்துக்காக அல்லது சம்பளத்திற்காக செய்யப்படுவதல்ல. அது தன்னைத் தான் ஒப்புக் கொடுக்

கின்ற அதாவது பலியாக ஒப்புக் கொடுப்பதாகும். இப்படிச் செய்வதே ஊழியத்தின் வெற்றியாகும். நமது ஆண்டவர் இவ்வாறு செய்து சிலுவையிலே வெற்றிச் சிறந்தார் (கொலோ 2:15) அவர் பட்டபாடுகள் எல்லாம் அவருக்கு வெற்றிப்படிகளாகும். ஆகவேதான், அவர் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆயினும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33) கிறிஸ்துவினிமித்தமாக அதாவது சுவிசேஷம் அறிவிப்பதினிமித்தமாக வரும் பாடுகளே அதிக ஆசீர்வாதத்தைத் தேடித்தரும் மற்றபடி ஊழியத்தில் ஊழல்கள் பல செய்து அதினிமித்தமாக தண்டிக்கப்படும் பாடுகள் அல்ல. நீங்கள் கிறிஸ்து வினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனென்றால், தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப்படுகிறார் உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனயாவது திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனையாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது (1பேதுரு 2:19,20)

**(தொடரும்)**

**K. பாஸ்கர், சிறுமுகை.**

## நாளும் நடப்பும்

1. **தூத்துக்குடி அருகே நடுக்கடலில் 4 நாட்களாக தத்தளித்த 7 பேர் மீட்பு.**
2. **ஏழை நாடுகளின் பொருள்களுக்கு இந்தியாவில் முழு வரி விலக்கு சலுகை அளிக்கப்படும் - பிரதமர் மன்மோகன்சிங் அறிவிப்பு.**
3. **பாகிஸ்தானின் எல்லைப்புற பகுதி தீவிரவாதிகளின் சொர்க்கப்பூமியாக இருக்கிறது என்று அமெரிக்க வெளிநாடு மந்திரி கண்டலீசா ரைஸ் கூறினார்.**
4. **ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தில் கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில் ஒருவர் பலி. 150 பேர் காயமடைந்தனர்.**
5. **பசிபிக் பெருங்கடலில் உள்ள சாலமன் தீவுகளில் ஏற்பட்ட பூகம்பத்தில் அநேகர் பலியானார்கள். இதன் அளவு 8 ரிக்டர் என பதிவானது.**
6. **கல்வி வேலை வாய்ப்பில் முஸ்லீம், கிறிஸ்தவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு - முதல்வர் கருணாநிதி அறிவிப்பு.**
7. **உலகக் கோப்பை கிரிக்கெட் - முதல் சுற்றிலேயே இந்தியா வெளியேற்றம்.**

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**குறைந்தது எட்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: **எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப் பேருரை ஆற்றுகிறார்.**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் | TV | திங்கள் | காலை | 7:30 - 7:45 |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555